சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம்,
சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515580

**ஆணை நாள் 07.06.2022**

**முன்னிலை**

**திரு மு.ஸ்ரீதர், பி.டெக்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA15878/C/2021**

திரு R. ரத்தினசாமி — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர், தலைமைப்
பொறியாளர் அலுவலகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம், ஈரோடு மண்டலம்,
ஈரோடு. — பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 6(1)கீழ் மனுசெய்த நாள் | 16.08.2021 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 20.09.2021 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 26.11.2021 |
| ஆணையத்தின் அறிவிப்பு நாள் | 09.12.2021 |

******

**ஆணை**

இன்று (07.06.2022) முற்பகலில் தொலைபேசி மூலம் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு R. ரத்தினசாமி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு கு.தாரிணி, செயற்பொறியாளர், தலைமைப் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், ஈரோடு மண்டலம், ஈரோடு ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 16.08.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 08.02.2019 தேதியிட்டு அளிக்கப்பட்ட மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தலைமைப் பொறியாளர் அலுவலகம், மின்வாரியம், ஈரோடு என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 20.09.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கும், 26.11.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கும் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.06.2022) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தான் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் இது நாள்வரை தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்கப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் ஆணையத்தைக் கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் குறித்து 09.10.2021 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கக்கூடிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆவணங்களின் அடிப்படையிலும் விசாரணையின் அடிப்படையிலும் ஆணையம் பரிசீலனை செய்ததில் மேல்முறையீட்டாளருக்கு பொது அதிகார அமைப்பினால் 09.10.2021 தேதியிட்டு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏற்புடையவை என ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/- மு.ஸ்ரீதர்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**பிரிவு அலுவலர்/ பிரிவுப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA15878/C/2021</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர், தலைமைப் பொறியாளர் அலுவலகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஈரோடு மண்டலம், ஈரோடு-9.

**<u>மனுதாரர்</u>**

திரு R. ரத்தினசாமி,
த/பெ. ரங்கசாமி,
53C, பாரதி நகர், சிறுமுகை - 641 302.
மேட்டுப்பாளையம் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

Copy to : Judgement file
AM/PS - 160622